அலைதாவியே ஆ ஆ பகைதேடும் ஓர் ஜீவனே
உயிர் மூச்சையே ஆ ஆ உரமாக்குமோர் தேகமே
கடல் மீதில் இடி என்றே உருவானிர் 2
கலங்கரை ஒளி என்றே கருவானிர்

அலைதாவியே ஆ ஆ பகைதேடும் ஓர் ஜீவனே

உயிரை சரமாக்கி விரைந்தே சென்றீரே
உதிரம் தனையூற்றி உணர்வே தந்தீரே
உங்கள் அனல் மூச்சில் வளரும் பூந் தோப்பு
உலகில் தமிழ் நெஞ்சம் மலரும் அதைபார்த்து
பொழுதும் சிவக்கும் புதுக்கோலம் வேர்த்து

அலைதாவியே ஆ ஆ பகைதேடும் ஓர் ஜீவனே

மலரும் வதனங்கள் சிதைந்தே போனாலும்
புலரும் தமிழீழம் உங்கள் பேர்சொல்லும்
ஊலகின் சிகரங்கள் உங்கள் ஊர்தானே
அலை போல் நிதம் வாழும் உங்கள் பேர்தானே
உணர்வின் சுணைகள் என் நாளும் நீங்களே

அலைதாவியே ஆ ஆ பகைதேடும் ஓர் ஜீவனே
உயிர் மூச்சையே ஆ ஆ உரமாக்குமோர் தேகமே
கடல் மீதில் இடி என்றே உருவானிர் 2
கலங்கரை ஒளி என்றே கருவானிர்